**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| 2023-ம் ஆண்டு ஜீலை மாதம் 4-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
|---|---|---|---|
| பெயர்: | திருப்பதி | தொழில் : | |
| த.பெ: | பூமிநாதன் | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**4.7.2023 OS No. 54/2022 வா.சா.1** திருப்பதி **ஆஜர்**
**முதல் விசாரணை :**

1. நான் இந்த வழக்கின் 1ம் வாதி ஆவேன். வாதி தரப்பு 1ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விவரங்களை படித்து காண்பித்து பின்பு நான் அதில் கையெழுத்து செய்துள்ளேன். 24.1.1980ம் தேதியிட்டு என் தாயார் கிரைய வாங்கிய பதிவு செய்யப்படாத அசல் கிரைய ஆவணம் தாக்கல் செய்கிறேன். **(கிரைய ஆவணம் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** 24.9.2019ம் தேதியிட்டு நத்தம் நில வரிதிட்ட தூய அடங்கல் பதிவேடு சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **(தூய அடங்கல் பதிவேடு வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. 29.9.2019ம் தேதியிட்டு நான் வட்டாட்சியரிடம் கொடுத்த மனு கை நகல் தாக்கல் செய்கிறேன். **( மனு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** புல எண்.195க்கான புல வரைபடம் நகல் தாக்கல் செய்கிறேன். **( புல வரைபடம் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** 2.5.1984ம் தேதியிட்டு என் தாத்தா பிரதிவாதிக்கு எழுதி வைத்த அடமானம் பத்திரம் சான்றிட்ட நகல் தாக்கல் செய்கிறேன். **( அடமான பத்திரம் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**(பிரதிவாதி தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது)**

Taken down by me in open court
read over/ interpreted to the witness
in Tamil and acknowledged by him,
her to be correct.

District Munsif Cum
Judicial Magistrate,
Thiruppuvanam.